வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 12.03.2026 வியாழக்கிழமை இதழ் : 66 பக்கங்கள் : 08

# உலகை ஆட்டம் காண வைத்த எரிபொருள்கள் விலையேற்றம்

## 85 நாடுகள் பெரும் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 12

மத்திய கிழக்கில் நிலவும் பதற்ற நிலையைத் தொடர்ந்து, உலகளவில் எரிபொருள் விலைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிரடியாக உயர்ந்துள்ளன.

போர் தொடங்கிய குறுகிய காலத்திற்குள் குறைந்தது 85 நாடுகள் பெற்றோல் விலை உயர்வைப் பதிவு செய்துள்ளன.

சர்வதேச எரிபொருள் விலை விவரங்களின்படி ஆசிய நாடுகள் இந்த விலை உயர்வால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

உலகிலேயே மிக அதிகப்படியான உயர்வாக 50 வீத விலை உயர்வைப் பதிவு செய்துள்ளது.

இங்கு ஒரு லீற்றர் பெற்றோல் 0.75 டொலரிலிருந்து 1.13 டொலராக உயர்ந்துள்ளது.

அத்துடன் லாஓஸில் 33 சதவீதமும், கம்போடியாவில் 19 சதவீதமும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சுமார் 17 சதவீத விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

மேலும் அவுஸ்திரேலியாவில் 18 சதவீத விலை உயர்வைப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உலகளாவிய எரிசக்தி விநியோகத்தின் முக்கிய பாதையான ஹோர்முஸ் நீரிணை போர் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழியாகவே பெரும்பாலான எண்ணெய் கப்பல்கள் பயணிக்கின்றன.

இதனால் எண்ணெய் இறக்குமதியை அதிகம் நம்பியிருக்கும் ஜப்பான், தென்கொரியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் கடும் எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளன.

நிலைமையைக் கட்டுப்படுத்த இந்த நாட்டு அரசாங்கங்கள் ஏற்கனவே அவசரகால நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. (அ)

# மருமகன் வாளால் வெட்டியதில் நெல்லியடியில் மாமியார் பலி!

## மாமனார் படுகாயம் சந்தேக நபர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 12

நெல்லியடி பகுதியில் மருமகனின் வாள்வெட்டில் மாமியார் பலியான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து குறித்த சந்தேக நபரை பருத்தித்துறை பொலிஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

வடமராட்சி பருத்தித்துறை, கிராமக்கோடு பகுதியில் மனைவியின் தந்தையாரை வாளால் வெட்டி படுகாயப்படுத்தி விட்டு, மனைவியின் தாயாரையும் வாளால் வெட்டி படுகொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் நபரே மாமனாரை படுகாயப்படுத்தி விட்டு மாமியாரை படுகொலை செய்துள்ளார்.

வாள்வெட்டுச் சம்பவத்தை தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான 5 இற்கு மேற்பட்ட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த சந்தேக நபரை அதிரடியாக கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை

07

# ஒரே இரவில் 5 வீடுகள் மீது அதிகாலையில் தாக்குதல்!

## தென்மராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தென்மராட்சி பிரதேசத்தில், ஆயுதங்கள் தாங்கிய குழுவினரால், ஒரே இரவில் ஐந்து வீடுகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 1.00 மணிக்கும் 2.30 மணிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒரு வீட்டின் மீதும், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 4 வீடுகள் மீதும், ஆயுதக் குழுவினர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிலுள்ள மீசாலை மேற்கு, வங்களா வீதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த ஆயுதக் குழுவினர், வீட்டில் இருந்த பொருட்களை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை தட்டான்குளம் வீதியில், இரண்டு வீடுகள் மீது பெற்றோல் குண்டுகள் வீசி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, வீடு முற்றாக தீக்கிரையாகியதுடன், மினி பஸ் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் எரிந்து நாசமாகின.

கொடிகாமம் பொலிஸ் பிரிவிலுள்ள, மீசாலை வடக்கு ஞான வைரவர் வீதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த குழுவினர், அங்கு தாக்குதல்களை

07

# லாப்ஸ் எரிவாயு விலை உயர்வு!

கொழும்பு, மார்ச் 12

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு

07

# உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கலாம்!

## ஐ.நா. எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 12

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிவரும் போரினால், ஹோர்மூஸ் நீரிணை மூடப்படுவதால் உணவுப் பொருள்களின் செலவுகள் அதிகரிக்கக்கூடும் என்றும் அது வாழ்க்கைச் செலவுக்கான அழுத்தங்களை அதிகரிக்கும் என்றும் ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி அமைப்பு தெரிவித்துள்ளது.

07

# உணவு விலை அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 12

எரிவாயு விலை உயர்ந்ததன் காரணமாக நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பால் தேநீர் 10 ரூபாவாலும், சாதாரண தேநீர் 05 ரூபாவாலும் , ரைஸ் மற்றும் கொத்து 25 ரூபாவாலும்,

07

# மத்திய கிழக்கு நாடுகளின் அமைதிக்கு வேண்டுகிறேன்

## திருத்தந்தை 14ஆம் லியோ



கொழும்பு, மார்ச் 12

திருத்தந்தை 14ஆம் லியோ மத்திய கிழக்கில் ஏற்பட்டுவரும் போரால் உயிரிழந்தவர்களுக்காக பிரார்த்தித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

திருத்தந்தை லியோ,

07

# வடக்கில் ஆசிரியர் இடமாற்றத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்துக!

## தவறும் அதிபர்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 12

வடக்கு மாகாணத்தில் 'சேவையின் தேவை கருதி' ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை முழுமையாக நடைமுறைப்படுத்திய பின்னரே, வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்

07

# அச்சமின்றி முதலிடுங்கள்!

## அழைக்கிறார் அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, மார்ச் 12

நாட்டில் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதால் முதலீட்டாளர்கள் அச்சமின்றி முதலீடுகளை முன்னெடுக்க முடியுமான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது கையூட்டு மற்றும் ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு இடமில்லாத "ஸீரோ

07

# புலனாய்வுப் பிரிவு மீது அரசியல் பழிவாங்கல்!

## அரசை சாடுகின்றார் நாமல்



கொழும்பு, மார்ச் 12

நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு முதுகெலும்பாக விளங்கும் புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளைத் தற்போதைய அரசாங்கம் அரசியல் காரணங்களுக்காகக் குறிவைப்பதாக

07

# மின்சார தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பு நிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 12

மின்சார தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் புதிய மின்சார நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று பிற்பகல் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இந்த முடிவை தொழிற்சங்கங்கள் எடுத்துள்ளன.

தற்போதைய சிக்கல்கள் குறித்து ஜனாதிபதியுடன் நேரடியாக கலந்துரையாட இன்று

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலியன் பூங்காவின் துப்பரவு பணி ஆரம்பம்!



யாழ்ப்பாணம், மார்ச் 12

நல்லூர் சங்கிலியன் பூங்கா புனரமைப்பின் முதற்கட்டமாகத் துப்புரவுப் பணிகள் நேற்று பதில் முதல்வர் இம்மானுவல் தயாளன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பெரும் பற்றைக் காடாகக் காட்சியளித்த இந்தப் பூங்கா யாழ். மாநகர சபையால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

முதற்கட்டமாக இந்தப் பூங்காவுக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் ஆரம்பப் பணிகள் நேற்று இடம்பெற்றன.

மண்ணுக்காக உயிர் நீத்தவர்களது நினைவான அமைக்கப்பட்ட இந்தப் பூங்க நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது கைவிடப்பட்டிருந்த நிலையில் பல தரப்பட்டோர் மத்தியிலும் பெரும் நெருடலாக இது இருந்தது. அதன் தேவை கருதியும், அங்கு பெரும் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன என்று பல தரப்பினராலும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் அதனை யாழ். மாநகர சபை புனரமைக்கத் தீர்மானித்துள்ளது.

யாழ். மாநகர சபையின் விசேட நடவடிக்கைகளில் ஒன்றாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர், கணக்காளர், பொறியியலாளர், முன்னாள் போராளிகள், உறுப்பினர்கள், குழுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

ஒரு துரித செயற்பாடாக இந்தா வேலைத்திட்டம் அமையும் என்று பதில் முதல்வர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வடக்கு மாகாண தொழில்முனைவோர் விருது வழங்கும் விழா யாழ்ப்பாணத்தில்




யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "வடக்கு மாகாண தொழில்முனைவோர் விருதுகள் - 2025" வழங்கும் விழா, மன்றத்தின் தலைவர் கு. வசீகரன் தலைமையில் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் - கொக்குவிலில் நடைபெற்றது.

இவ்விசேட நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளி, தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லக்ஸ்மன் அபயசேகர, யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றத்தின் பிரதிநிதிகள், தொழில் முனைவோர் மற்றும் துறைசார் அதிகாரிகள் பலர் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு விருதுகளை வழங்கிவைத்து விசேட உரையாற்றிய ஆளுநர், இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு வளமான வடக்கு மாகாணத்தின் பங்களிப்பானது தற்போது 4.5 சதவீதமாகக் கடைசி மட்டத்தில் காணப்படுவதாகவும், எதிர்வரும் சில ஆண்டுகளில் இப்பங்களிப்பை ஆகக்குறைந்தது 10 சதவீதமாக உயர்த்துவதற்கான இலக்கை நோக்கி, தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கியுள்ளதாக தெரிவித்தார்.

(அ)

# உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன்!



யாழ்ப்பாணம், மார்ச் 12

வலய மட்ட ரீதியிலான பெருவிளையாட்டுப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி இரண்டு சம்பியன்களை சுவீகரித்துள்ளது.

குறித்த போட்டியில் பூப்பந்தாட்டத்தில் 18 வயதுப்பிரிவில் முதலாமிடத்தையும், 16 வயதுப் பிரிவு இரண்டாமிடத்தையும் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

வெற்றி பெற்ற அணிகளுக்கும், அவர்களை பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர்களுக்கும் பல்வேறு தரப்பினரும் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

(அ-05)

# டிப்பர் வாகனத்தை மறித்து தாக்குதல்!

முல்லைத்தீவு, மார்ச் 12

முல்லைத்தீவு மாங்குளத்திற்கும், முறிகண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் டிப்பர் வாகனத்தை இடைமறித்து மது போதையில் சென்ற இருவர் தாக்குதல் நடத்திய சம்பவம் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டுவரும் இருவரே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மணல் அகழ்வில் தாங்கள் ஈடுபடும் தகவலை டிப்பரில் சென்ற நபர் பொலிஸாருக்கு வழங்கினார் எனத் தெரிவித்தே தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் காணியற்றவர்களுக்கு நேர்முக தேர்வு

முல்லைத்தீவு, மார்ச் 12

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் காணியற்றவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள மக்களின் தகுதியை சரிபார்த்து உண்மையில் காணியற்றவர்களாக உள்ளவர்களை அடையாளம் காணும் நோக்கில் நேர்முகத் தேர்வுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, நேற்று முன் தினம் துணுக்காய் - அணிஞ்சியன்குளம் கிராம சேவையாளர் பிரிவில் காணியற்றவர்களாக பதிவு செய்துள்ள 111 விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு, துணுக்காய் பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்நேர்முகத் தேர்வில் 66 விண்ணப்பதாரிகள் நேரில் கலந்து கொண்டு தங்களது விவரங்களை சமர்ப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வு துணுக்காய் பிரதேச செயலாளர் இ.ரமேஸ் தலைமையில் நடைபெற்றதுடன், காணி கிளை உத்தியோகத்தர்கள், குறித்த கிராம சேவையாளர் மற்றும் சமூக மட்ட அமைப்புகளான கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், கமக்கார அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு விண்ணப்பதாரிகளின் தகவல்கள், வாழ்வாதார நிலைமை மற்றும் தகுதிகள் தொடர்பாக விரிவான பரிசீலனைகளை மேற்கொண்டனர்.

(அ)

# மண்டைதீவு சுற்றுலா மைய விடயம் குறித்து நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறையீடு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம், வேலணை - மண்டைதீவு சுற்றுலா மையத்தின் உருவாக்கலில் அரச நிதியை துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் அரச உயர் அதிகாரிகளுக்கு எதிராக கொழும்பு நிதிக் குற்றப் புலனாய்வும் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் உறுப்பினரும் தீவக முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான சுவாமிநாதன் பிரகலாதனால் இந்த முறைப்பாடு நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மண்டைதீவில் சுற்றுலா அமைச்சினால் அமைக்கப்பட்ட "எக்கோ ரூறிசம" திட்டம் தோல்வியடைய அன்றிருந்த அரச அதிகாரிகளே காரணம் என குற்றம் சாட்டப்பட்டுவரும் நிலையில் குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டில் அன்றைய காலப்பகுதியில் இருந்த யாழ் மாவட்ட அரச அதிபராக இருந்த நாகலிங்கம் வேதநாயகன், வேலணை பிரதேச செயலர்களாக இருந்த சுகுணாரதி தெய்வேந்திரம் மற்றும் அ.சோதிநாதன் ஆகியோரால் வேலணை பிரதேசத்திற்கு சுமார் 77 மில்லியன் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ)

# பாலைதீவு சென்ற படகு விபத்து காயமடைந்த பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் இருந்து பாலைதீவு அந்தோனியார் திருவிழாவுக்கு பக்தர்களை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்த நிலையில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் கிழக்கு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

பாலைதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கு, கடந்த 06 ஆம் திகதி காலை குருநகர் பகுதியில் இருந்து பக்தர்களை ஏற்றிச் சென்ற படகொன்று புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கடலில் விபத்துக்குள்ளாகி நீரில் மூழ்கியது.

இவ்வாறு மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோரில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

(அ)

# கொடிகாமத்தில் தீ வைக்கப்பட்ட பஸ்!

யாழ்ப்பாணம், மார்ச் 12

கொடிகாமம் பகுதியில் நேற்று அதிகாலை பஸ் சேவையில் ஈடுபடும் இரு தரப்புக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பஸ் ஒன்று தீ வைக்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

இச் சம்பவத்தில் நேரடியாக தொடர்பு பட்ட சந்தேக நபர்கள் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.03.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## நேபாளத் தேர்தல் முடிவுகள் கூறும் செய்தி

தெற்காசியாவில் அண்மைய வருடங்களில் மக்கள் கிளர்ச்சியினால் அரசாங்கங்கள் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்ட நாடுகளில் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலும் பிறகு கடந்த மாதம் பங்களாதேஷிலும் இறுதியாக கடந்த வாரம் நேபாளத்திலும் தேர்தல்கள் நடைபெற்று மக்கள் ஜனநாயக ரீதியாக புதிய அரசாங்கங்களை தெரிவு செய்திருக்கிறார்கள்.

இலங்கையிலும் பங்களாதேஷிலும் நடந்ததைப் போன்று நேபாளத்திலும் கிளர்ச்சிகளின் முன்னரங்கத்தில் நின்ற சக்திகளை மக்கள் அதிகாரத்துக்கு கொண்டுவரவில்லை. கிளர்ச்சிக்கு பின்னர் இலங்கையில் பதவிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனையோ (ஜே.வி.பி. ) அல்லது பங்களாதேஷில் கடந்த மாதம் பதவிக்கு வந்த பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியோ புதிய கட்சிகள் அல்ல.

ஆனால், மார்ச் 5 தேர்தலில் நேபாளத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ராஷ்டிரிய சுவதந்திர கட்சி (ஆர்.எஸ்.பி.) வெறுமனே நான்கு வருடங்களுக்கு முன்னர் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டில் பலகட்சி ஜனநாயக முறைமை நிறுவப்பட்ட பிறகு நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் அரசியல் உறுதிப்பாடின்மையை சந்தித்த நேபாளத்தில் வாக்காளர்கள் புதிய கட்சிக்கு தீர்க்கமான ஆணையை இந்த தடவை வழங்கியிருக்கிறார்கள்.

மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு நேரடியாகத் தெரிவு செய்யப்படும் 165 ஆசனங்களில் தீர்க்கமான பெரும்பான்மையையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ வாக்குகளில் சுமார் 50 சதவீதத்தையும் பெற்று ஆர்.எஸ்.பி. நீண்டகாலமாக நேபாள அரசியலில் ஆதிக்கம் செலுத்திவந்த அரசியல் கட்சிகளை படுதோல்வியடையச் செய்திருக்கிறது.

அண்மைய தசாப்தங்களாக கூட்டரசாங்கத்தை அமைத்துவந்த நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (ஐக்கிய மார்க்சிஸ்ட் - லெனினிஸட்), மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் நேபாள காங்கிரஸ் கட்சி ஆகியவையே இந்த தடவையும் ஆட்சியை அமைக்கும் என்றே அவதானிகள் பரவலாக எதிர்பார்த்தார்கள். ஆனால், பாரம்பரியமான கட்சிகள் மீது நேபாள மக்கள் எந்தளவுக்கு வெறுப்பைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கடந்த வாரத்தைய தேர்தல் முடிவுகள் பிரகாசமாக வெளிக்காட்டி நிற்கின்றன.

இலங்கையில் கிளர்ச்சியைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் சிந்தனை மாற்றத்தையும் பாரம்பரியமான அரசியல் வர்க்கத்தின் மீதான வெறுப்பையும் அனுகூலமாகப் பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி எவ்வாறு அதிகாரத்தைக் கைப்பற்றியதோ அதேபோன்றே நேபாளத்திலும் இளந்தலைமுறையினரின் கிளச்ச்சியின் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களை பயன்படுத்தி காத்மாண்டு மேயரான பாலேந்திர ஷா தலைமையிலான ஆர்எஸ்.பி. அதிகாரத்துக்கு வந்திருக்கிறது.

நேபாளத்தின் புதிய பிரதமராக பதவியேற்கவிருக்கும் 35 வயதான பாலேந்திரா முன்னாள் பிரதமரான சர்மா ஒலியை அவரது தொகுதியில் சுமார் 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்திருக்கிறார். அரசியல் தலைமைத்துவத்தில் தலைமுறை மாற்றத்தை வேண்டி நின்ற இளந் தலைமுறையினர் பாலேந்திராவை ஆதரித்தனர். தலைநகர் காத்மாண்டுவில் உள்ள சகல 15 தொகுதிகளிலும் ஆர்.எஸ்.பி.பெற்ற மகத்தான வெற்றி இளந்தலைமுறை வாக்காளர்கள் மத்தியில் கம்யூனிஸ்டுகள் மற்றும் மாவோவாதிகள் உட்பட பழைய அரசியல் வர்க்கம் மீது எந்தளவுக்கு வெறுப்பு இருக்கிறது என்பதை தெளிவாக வெளிக்காட்டியது.

ஆனால், இளந்தலைமுறையினர் உட்பட நேபாள மக்கள் அவசரமாக வேண்டிநிற்கும் அரசியல் சீர்திருத்தங்களையும் பொருளாதார மீட்சியையும் கொண்டு வருவதற்கு பாலேந்திராவும் ஆர். எஸ். பி.யும் தங்களுக்கு கிடைத்த மகத்தான ஆணையை பயன்படுத்துவதில் எந்தளவுக்கு ஆற்றலைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். எது எவ்வாறிருந்தாலும் தெற்காசியா பூராவும் பாரம்பரிய அரசியல் வர்க்கம் மீது மக்கள் கொண்டிருக்கும் கடுமையான வெறுப்பை வெளிக்காட்டிய இன்னொரு சந்தர்ப்பமாக நேபாளத் தேர்தல் அமைந்திருக்கிறது.

## ஏற்றுமதி நோக்கிய அபிவிருத்திக்கு ஒருங்கிணைந்து செயற்படவேண்டும்

### திணைக்களங்களுக்கு வடக்கு ஆளுநர் அழைப்பு



*யாழ்ப்பாணம், மார்ச் 12*

ஏற்றுமதி நோக்கிய அபிவிருத்திக்கு அனைத்துத் திணைக்களங்களும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி நோக்கிய அபிவிருத்தியைத் துரிதப்படுத்துதல் தொடர்பான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்றது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லக்ஸ்மன் அபயசேகர அவர்கள் விசேடமாகப் பங்கேற்ற இக்கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், எமது வடக்கு மாகாணத்தின் வளங்கள் இன்னமும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார். மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், ஏற்றுமதி நோக்கிய அபிவிருத்தியை அடைவதற்கும் சகல திணைக்களங்களும் ஒன்றுபட்டு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் எனக் குறிப்பிட்ட அவர், விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் நாளாந்தம் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வுகாண விவசாய உற்பத்திகளைப் பெறுமதிசேர் உற்பத்திகளாக மாற்றி ஏற்றுமதி செய்யும் செயன்முறைகளை பெருமளவு ஊக்குவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற திறந்த கலந்துரையாடலில், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் நடைமுறைச் சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. இதன்போது, அறிவியல் நகரில் அமைந்துள்ள வணிகக் காப்பகத்தை எதிர்வரும் இரண்டு மாத காலத்துக்குள் முழுமையாக இயங்கச் செய்து தொழில் முயற்சியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காகத் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சின் ஊடாக மேலதிக உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகக் கற்றல் மையம் மற்றும் தொழில் திணைக்களம் ஆகியன இணைந்து புதிய வணிக யோசனைகளை ஊக்குவிக்கவும் முடிவெடுக்கப்பட்டது. (அ)

## வறுமை ஒழிப்பு தொடர்கின்றபோதும், நாட்டில் வறுமை நிலை ஒழியவில்லை

### அமைச்சர் உபாலி பன்னிலகே

*கிளிநொச்சி, மார்ச் 12*

கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்கள், வறுமையை ஒழிப்பதற்காக பல்வேறு திட்டங்களை கொண்டு வந்திருந்தாலும், நாட்டில் வறுமை ஒழியவில்லை என, கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள தாமரை தடாக மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற பிரஜா சக்தி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலில் இவ்வாறு குறிப்பிட்டார்.

வறுமை ஒழிப்பு வேலைத் திட்டத்தை, கடந்த வருடத்தின் ஜூலை மாதத்தில் ஆரம்பித்திருந்தோம்.

இதற்கு முன்னர், இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து, வறுமையை ஒழிப்பதற்கு, பல்வேறு திட்டங்கள் அரசாங்கங்களால் அறிமுகப்படுத்தப் பட்டன.

ஜனசக்தி, சமுர்த்தி, அஸ்வெசும போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், 24 விதமான மக்கள் வறுமையில் இருப்பதாக, ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக 90 வீதமான மக்கள், பல்வகை வறுமையின் கீழ் வாழ்கின்றார்கள்.

அதாவது மலையகம் மற்றும் கிராமப் புறங்களில் வாழ்கின்ற மக்கள், தொடர்ந்தும் வறுமையிலே வாழ்கின்றனர்.

என அமைச்சர் உபாலி பன்னிலகே குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னர் மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பிரஜா சக்தி உறுப்பினர்கள் மற்றும் மாவட்டச் செயலக பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாத காலத்திற்கு தேவையான எரிபொருள் நாட்டில் கையிருப்பில்!

## எரிசக்தி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 12

உலகளாவிய ரீதியில் நிலவி வரும் பூகோள அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில், எரிபொருள் விநியோகத் தடைகள் ஏற்படக்கூடும் என்ற அச்சம் நிலவி வருகின்றபோதிலும், இலங்கையிடம் சுமார் ஒரு மாத காலத்திற்குத் தேவையான எரிபொருள் கையிருப்பு உள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக எரிசக்தி பிரதி அமைச்சர் அர்க்கம் இலியாஸ் கருத்துத் தெரிவிக்கையில்-

தற்போதுள்ள கையிருப்பு போதுமானதாக இருப்பினும், சர்வதேச எரிபொருள் சந்தையில் நிலைமை மேலும் மோசமடைந்தால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைச் சமாளிப்பது குறித்து பல்வேறு மட்டங்களில் ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த ஒரு மாதத்திற்குத் தேவையான எரிபொருள் எங்களிடம் உள்ளது. எனினும், அதற்குப் பின்னர் மேலதிக கையிருப்பு எதுவும் இல்லை. இந்தச் சூழலை எதிர்கொள்வது குறித்து நாங்கள் தொடர்ச்சியான விவாதங்களை நடத்தி வருகிறோம்- என்றார்.

மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பதற்றத்தினால் சர்வதேச எண்ணெய் விலையில் நிலையற்ற தன்மை ஏற்பட்டுள்ள சூழலில் அமைச்சரின் இந்த விளக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது. இதேவேளை, 30 நாட்களுக்குத் தேவையான எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கான போதிய வசதிகள் நாட்டில் இல்லை என தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைப் பிரதி அமைச்சர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். (அ)

# மின்சார கட்டணத்தை படிப்படியாக குறைப்பதே சீரமைப்பின் நோக்கம்!

கொழும்பு, மார்ச் 12

மின் உற்பத்தி செலவைக் குறைத்து, மின் கட்டணங்களை படிப்படியாகக் குறைப்பதே மறுசீரமைப்பின் ஒரு நோக்கமாகும் என இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான செயலணியின் பிரதானி புபுது நிரோஷன் ஹெடிகல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார சபையின் 2,153 ஊழியர்கள் இதுவரை விருப்ப ஓய்வுத் திட்டத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

சபை கலைக்கப்பட்டாலும் எவரும் வேலையிழக்க மாட்டார்கள், அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அனைத்து சலுகைகளும் வசதிகளும் தொடர்ந்து வழங்கப்படும்.

அத்துடன் நுகர்வோர் இனி மின்சார சபைக்குப் பதிலாக எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட்டுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

இருப்பினும், அவசர அழைப்பு இலக்கங்கள் மற்றும் கட்டணம் செலுத்தும் முறைகளில் எவ்வித மாற்றமும் இருக்காது.

ஆறு புதிய நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை அதிகரித்து, மின் உற்பத்திச் செலவைக் குறைப்பதே இதன் பிரதான இலக்காகும்.

மேலும் மின் உற்பத்தி செலவைக் குறைத்து, மின் கட்டணங்களை படிப்படியாகக் குறைப்பதே இந்த மறுசீரமைப்பின் ஒரு நோக்கமாகும்-என்றார். (அ)

# அமைச்சர் குமார ஜயக்கொடியை உடனடியாக பதவி நீக்கவேண்டும்

கொழும்பு, மார்ச் 12

எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதைக் காரணம் காட்டி, அவரை உடனடியாகப் பதவியிலிருந்து நீக்குமாறு இலஞ்ச ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிரான பிரஜைகள் சக்தி அமைப்பு, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்றினை அந்த அமைப்பு ஜனாதிபதி செயலகத்தில் கையளித்துள்ளது.

ஊழலை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இதுவரை அமைச்சருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த அமைப்பின் தலைவர் காமந்த துஷார கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னைய அரசாங்கங்களில் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தபோது அவர்கள் பாதுகாக்கப்படுவதாகக் குற்றம் சாட்டிய ஜே.வி.பி மற்றும் தேசிய மக்கள் சக்தி, தற்போது அதே பாணியில் செயல்படுகிறதா என்றும் அவர் வினவியுள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு இலங்கை உர நிறுவனத்தின் பிரதி கொள்வனவு முகாமையாளராக பணியாற்றிய காலத்தில், களஞ்சியசாலை தரைவிரிப்பு விநியோக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் தனியார் நிறுவனத்திற்கு சட்டவிரோத லாபத்தைப் பெற்றுக்கொடுத்து, அரசாங்கத்திற்கு சுமார் 8.8 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாக அமைச்சருக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஊழல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# லிட்ரோ எரிவாயு விலை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 12

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லிட்ரோ எரிவாயு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 300 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 3 ஆயிரத்து 990 ரூபாவாகும்.

அதேபோல், 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 120 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை ஆயிரத்து 602 ரூபாவாகும்.

மேலும், 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 56 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 750 ரூபாவாகும். (அ)

# விலைச் சூத்திரத்தை மீறி எரிபொருள் விலையேற்றம்

## மின்சார நுகர்வோர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 12

ஒன்பது நாட்களுக்குள் இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ள எரிபொருள் விலை அதிகரிப்பு, நாட்டில் பெரும் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் எரிபொருள் விலைச்சூத்திரத்தை மீறி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக மின்சார நுகர்வோர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஏப்ரல் 1 முதல் ஜூன் 30 வரையான காலப்பகுதிக்காக இலங்கை மின்சார சபை கோரியுள்ள 13.56 வீத மின் கட்டண உயர்வுக்கு வழிவகுக்கும் நோக்கிலேயே, திட்டமிட்ட அடிப்படையில் இந்த விலை உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்தார்.

பொதுவாக மாதத்தின் முதல் திகதியிலேயே விலை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற விதியை மீறி, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மின் கட்டண மீளாய்வில் நடைபெறும் வேளையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

---

மார்ச் - 12 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 28
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : நவமி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாகபேசுவீர்கள். குடும்பத்திலுள்ளவர்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். நாவடக்கம் தேவை.

**இடபம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு உதவுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மிதுனம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தொட்டது துலங்கும்.

**கடகம்**
மற்றவர்களை நம்பி எந்தவேலைகளையும் ஒப்படைக்க கூடாது என்று முடிவெடுப்பீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**கன்னி**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புதுவாகனம் வாங்குவீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம். அலைக்கழிக்கப்படுவீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும்.

**தனுசு**
ஒரு விஷயத்தை நினைத்து அதிக அளவில் குழப்பம் அடைவீர்கள். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்**
உங்களின் அணுகு முறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் லாபம் உயரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களியுங்கள்

**வர்த்தக சமூகத்தினருக்கு ஜனாதிபதி அழைப்பு**

கொழும்பு, மார்ச் 12

வர்த்தக சமூகத்தினர் தமது நிறுவனங்கள் மற்றும் வர்த்தகங்களை முன்னேற்றுவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களிக்குமாறு வர்த்தக சமூகத்தினருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை இளம் தொழில் முயற்சியாளர்கள் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்தவொரு பொருளாதாரமும் அதன் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் முன்னேறுகிறது.

வர்த்தகர்கள் நிதித் துறையில் பணிபுரிபவர்கள். பொதுமக்கள் பொருளாதாரத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்.

ஏனெனில் அவநம்பிக்கை பொருளாதாரங்களை அழிக்கிறது.

நிலையானதும் வெளிப்புற மற்றும் உள் அதிர்ச்சிகளுக்கு ஈடுகொடுக்கக்கூடியதுமான பொருளாதாரமே நமக்குத் தேவை உள் அதிர்ச்சிகள் வெற்றிகொள்ளப்பட்டாலும், மத்திய கிழக்கில் தற்போதைய போர்ச் சூழல் காரணமாக வெளிப்புற அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தின் தொடக்கத்தில் இருந்து ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை சுமார் 42 சதவீதம் அதிகரித்து உலக சந்தையில் கடுமையான நிச்சயமற்ற தன்மை உருவாகியுள்ளது.

இந்த நாட்டில் நுகர்வோர் நடத்தையிலும் நிச்சயமற்ற தன்மை உள்ளது.

மார்ச் முதலாம் திகதி 4,500 கிலோலிற்றராக இருந்த டீசல் விற்பனை மார்ச் 3 ஆம் திகதிக்குள் 10,500 கிலோலிற்றராக அதிகரித்துள்ளது என்பது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

2022 ஆம் ஆண்டு டொலர் பற்றாக்குறையினாலேயே நெருக்கடி ஏற்பட்டது.

இந்த முறை விநியோக பாதைகள் மூடப்பட்டதால் விநியோக நெருக்கடியே ஏற்பட்டுள்ளது.

நாம் தனித்தனியாக அன்றி கூட்டாக சவாலை எதிர்கொள்ள முடியும்.

நெருக்கடியை வெற்றிகொள்ள அரசாங்கம் "பொருளாதார கண்காணிப்புக் குழுவை" நிறுவியுள்ளது.

விநியோகங்களைப் பேண நட்பு நாடுகளுடன் கலந்துரையாடி வருகிறோம்.

டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கல் மூலம் அரச பொறிமுறையை மறுசீரமைக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றுவதுடன், வர்த்தக சமூகத்தினர் என்ற வகையில் தமது நிறுவனங்கள் மற்றும் வர்த்தகங்களை முன்னேற்றுவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களிக்குமாறு வர்த்தக சமூகத்தினருக்கு அழைப்பு விடுக்கின்றோன்-என்றார். (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகளுடன் பிரதமர் பேச்சு

கொழும்பு, மார்ச் 12

இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரிய, பிலிப்பைன்ஸிற்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, மணிலாவிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் தொடர்ச்சியான இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். இலங்கை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், நடைமுறையிலுள்ள திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்காலக் கூட்டாண்மை வாய்ப்புகளைக் கண்டறிதல் ஆகியவற்றுக்கு இப்பேச்சுவார்த்தைகளின் போது முன்னுரிமை அளிக்கப்பட்டது.



இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, பிரதமர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசாட்சுகு அசகவாவை சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது, இரு தரப்புக்கும் இடையிலான உறவை மேலும் உறுதிப்படுத்துவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது. பிரதமரை வரவேற்ற தலைவர் மசாட்சுகு அசகவா அண்மைக்கால பொருளாதார நெருக்கடியின் பின்னர் இலங்கைப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளைப் பாராட்டினார்.

"டித்வா" சூறாவளி அனர்த்தத்தின்போது ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய உதவிகளுக்கும், இலங்கையுடன் முன்னெடுத்து வரும் விரிவான அபிவிருத்தி ஒத்துழைப்புகளுக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது நன்றிகளைத் தெரிவித்தார். அத்துடன், இலங்கையின் நீண்டகால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவு இன்றியமையாதது என்பதையும் அவர் வலியுறுத்தினார். (அ)

# பேராதனை பல்கலை மாணவர்கள் தீப்பந்தங்களை ஏந்தி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 12

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் இரவு தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி ஆர்பாட்டக்காரர்கள் பல்கலைகழகத்திலிருந்து தீப்பந்தங்களுடன் ஊர்வலமாக கண்டி - கொழும்பு பிரதான பாதையை அடைந்து, கலஹா சந்தியில் சுலோகங்களை ஏந்தியும் காட்சிப்படுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போதைய அரசு பல்கலைக்கழகங்களை ஒரு பாலர் பாடசாலையாக நினைத்து சட்டங்ளை புதிதாக அறிமுகம் செய்து மாணவர் சுதந்திரத்தை பறிக்க முற்படுவது அவதானிக்க முடிவதாகவும் தெரிவித்தனர். இதற்கு எதிராக தொடர் போராட்டங்களை நடத்த உள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர்.(அ)

# 2025 ஆம் ஆண்டில் 7.8 பில்லியன் ரூபா இலாபமீட்டியது தேசிய லொத்தர் சபை

கொழும்பு, மார்ச் 12

தேசிய லொத்தர் சபையினால் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளின்படி, 2025 நிதியாண்டிற்கான நிகர இலாபம் 7.8 பில்லியன் ரூபாயாக காணப்படுவதோடு, இது 2024 ஆம் ஆண்டில் நிகர இலாபமாக இருந்த 6 பில்லியன் ரூபாவை விட 30 வீத அதிகமாகும். இதற்கு இணையாக, லொத்தர் விற்பனை வணிக வலையமைப்பால் ஈட்டப்பட்ட வருமானம் 9 பில்லியனைக் கடந்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டில் அவர்கள் பெற்ற வருமானத்தை விட 27 வீத அதிகமாகும்.

2025 ஆம் ஆண்டின் இறுதியில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட தொகை 7.2 பில்லியன் ரூபாயாக இருந்தது, இது 2024 ஐ விட 1.6 பில்லியன் ரூபாய் அதிகரிப்பாகும், இது 28 வீதமான வளர்ச்சியைக் குறிக்கிறது.

தேசிய லொத்தர் சபை 20 வீத வருமான வளர்ச்சியை அடைந்தது, இது 2025 ஆம் ஆண்டில் அசல் மதிப்பிடப்பட்ட வருமானமான 40 பில்லியன் ரூபாயை விட 8 பில்லியன் ரூபாய் அதிகமாகும். 2025 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபையின் விற்பனை வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன், 2025 ஆம் ஆண்டில் லொத்தர் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை 24.8 பில்லியனாகும், இது 2024 இல் வழங்கப்பட்ட பரிசுத் தொகையை விட 26.8 வீத அதிகமாகும். (அ)

# ஈரானிய மாலுமிகளின் உடல்களை ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, மார்ச் 12

காலி மருத்துவமனையில் இரண்டு நடமாடும் குளிர்பதன அறைகளில் வைக்கப்பட்டுள்ள 84 ஈரானிய மாலுமிகளின் உடல்களை ஈரானிய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு காலி பிரதம நீதவான் சமீர தொடங்கொட நேற்று காலை காலி மருத்துவமனையின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

காலி துறைமுக பொலிஸார் காலி பிரதம நீதவான் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (அ)

எச்சரிக்கை!
உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?
SUN DIRECT TATA sky dishtv VIDEOCON d2h Digital DTH Service
இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும்
இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க,
இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்!
It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.
Telecommunications Regulatory Commission of Sri Lanka
155 செனல்கள்
1420/- ரூபா
(அனைத்துவரிகளும் சேர்த்து)
புதிய இணைப்புக்கு 10,000/- ரூபா மட்டுமே!
தொடர்புக்கு
0707 888 999 நிபந்தனைக்கு உட்பட்டது.
Ask CABLE VISION
உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!
நம்பகமான சேவை | தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளிகளின் உயர்வுக்கு தொழிற் பயிற்சி நிலையம் திறப்பு!

கல்முனை, மார்ச் 12

"ஒளிரும் கரங்கள்" நிறுவனத்தினால் மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்முனையில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது .



ஒளிரும் கரங்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் விசேட தேவையுள்ள பிள்ளை நல அமைப்பின் தலைவருமான ரி. இளையராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிலையத்தை திறந்து வைத்தார்.

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் மொகான் அபேசுந்தர, மாவட்ட பரிசோதகர் கே . செல்வபிரகாஷ், விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே. பிரதீஸ்வரன், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பல பிரமுகர்கள் மதகுருமார்கள் கலந்து சிறப்பித்தனர்.

தற்போது இப் பயிற்சி நிலையத்தில் அம்பாறை மாவட்டத்தின் பெரியநீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையிலான பிரதேசங்களில் இருந்து 30 மாற்றுத் திறனாளிகள் இணைந்துள்ளனர். (அ)

# மீண்டும் வரலாற்றுச் சாதனை படைத்த நிந்தவூர் அல்-அஷ்றக் கபடி அணியினர்

அம்பாறை, மார்ச் 12

கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பாடசாலை கபடி சங்கம் நடாத்திய 2026 ஆம் ஆண்டுக்குரிய தேசிய மட்ட கபடிப் போட்டிகள் கம்பளை வெலம்பொட எக்ஸிலியன் உட்புற விளையாட்டு அரங்கத்தில் கடந்த 07ஆம்,08ஆம்,09 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

இப் போட்டிகளில் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலையின் 14, 16, 18 ஆகிய வயது பிரிவு கபடி அணிகள் பங்கு கொண்டு மூன்று அணிகளுமே வெற்றிவாகை சூடி பாடசாலைக்கு தேசிய ரீதியில் பெருமை தேடிக் கொடுத்துள்ளன.

இதில்18 வயதுக்குட்பட்ட அணியினர் தங்கப்பதக்கத்தைப் பெற்றதோடு,14 வயதுக்குட்பட்ட அணியினர் வெள்ளிப்பதக்கத்தையும் 16 வயதுக்குட்பட்ட அணியினர் வெண்கலப் பதக்கத்தையும் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

# சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் உலக மகளிர் நாள்

திருமலை, மார்ச் 12

வையத் தலைமை கொள் எனும் தொனிப் பொருளில் மூதூர் கிழக்கு - சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் உலக மகளீர் நாள் ஒழுங்கமைக்கப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

நாடகம், கவியரங்கு,நடன அரங்கு,இசை அரங்கு,உரை அரங்கு என கலை நிகழ்வுகள் நடைபெற்றன.


சிறுமிகள் முதல் அன்னையர்கள் வரை இந்த பெரு மகிழ் கலை நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)



# கிராமசேவகர் பிரிவுக்கு ஒரு வீடு; அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைப்பு

அம்பாறை, மார்ச் 12

பிரஜாசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கிராமசேவகர் பிரிவுக்கு ஒரு வீடு திட்டத்தின் கீழ், தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசம் உட்பட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொள்வதற்கான ஆரம்பகட்ட அடிக்கல் நடும் நிகழ்வு அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவாவினால் கல்முனையில் நேற்று முன் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வுகளில், பிரதேச செயலாளர், அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர்கள், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பொறியியலாளர்கள் மற்றும் பிரதேச செயல்பாட்டாளர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர், பிரஜாசக்தி தவிசாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பதுளை மாவட்ட செயலராக சுனில் கலகம பதவியேற்பு



கொழும்பு, மார்ச் 12

இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான சுனில் கலகம, நேற்று முன் தினம் பதுளை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் பதுளை மாவட்ட செயலாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

2000 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்த அவர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் உதவி பணிப்பாளராக தனது அரசுப் பணியை ஆரம்பித்தார்.

அதன் பின்னர் சட்டமும் ஒழுங்கும் அமைச்சில் உதவி செயலாளராகவும், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் பிரதிக் கட்டுப்பாட்டாளராகவும், அபுதாபியில் உள்ள இலங்கை தூதரகத்தில் பிரதி தூதராகவும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் ஆலோசகராகவும், கொழும்பு மேலதிக மாவட்ட செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

பதுளை மாவட்ட செயலாளராக பொறுப்பேற்கும் முன்பு, அவர் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் மேலதிக செயலாளராகவும் (அபிவிருத்தி) பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அம்பாறை அரசாங்க அதிபராக அனுபம மங்கள விக்ரமாராச்சி!

அம்பாறை, மார்ச் 12

அம்பாறை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவையின் அதிசிறப்பு அதிகாரியான அனுபம மங்கள விக்ரமாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.



அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த சிந்தக அபேவர்த்தன இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார். அவருக்கு நேற்று புதன்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் பிரியாவிடை வைபவம் நடைபெற்றது.

அதேவேளை, புதிதாக நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபர் மங்கள விக்ரமாராச்சி, 2014 களில் மகா ஓயா மற்றும் கல்முனை பிரதேச செயலாளராக சேவையாற்றியிருந்தார்.

நாளை வியாழக்கிழமை அவர் பதவியை பொறுப்பேற்கும் வைபவம் நடைபெறவிருக்கிறது.

# அறிவுச் சுரங்கம் போட்டியில் நிந்தவூர் அல்-அஸ்றக் 3ஆம் இடம்



அம்பாறை, மார்ச் 12

நிந்தவூர் அல்- அஸ்றக் தேசிய பாடசாலை மாணவர்கள் அறிவுச் சுரங்கம் பொது அறிவுப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தினைப் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பிரிவு தேசிய ரீதியாக நடத்திய அறிவுச் சுரங்கம் பொது அறிவுப் போட்டியானது கொழும்பு அல் ஹிதாயா கல்லூரியில் நடைபெற்றது.

இப் போட்டி நிகழ்ச்சி முஹம்மட் அஜ்மல் ஹானீப் தலைமையில் முஹம்மட் நவாஸ் அமானிர், அப்துல்லா முஹம்மட் நௌஷாத் ஆனில் அஹமட் ஷௌக்கி ஆகிய மாணவர்கள் கலந்து கொண்டு, வெற்றி பெற்று பாடசாலைக்குப் பெருமை ஈட்டிக் கொடுத்துள்ளனர்.

மேற்படி தேசிய நிலைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் பணப்பரிசு, பரிசுப்பொதி, பதக்கம் மற்றும் சான்றிதழ் என்பன வழங்கப்பட்டன. (அ)

# சமுர்த்தி வங்கி ஏற்பாட்டில் மகளிர் தின சிறப்பு நிகழ்வு

அம்பாறை, மார்ச் 12

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் அதன் முகாமையாளர் நியாத் ஏ.மஜீத் தலைமையில் மகளிர் தின சிறப்பு நிகழ்வு சாய்ந்தமருது வங்கி மண்டபத்தில் இடம் பெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மார்க் 08 முதல் மார்ச் 31 வரையான காலப்பகுதியினை மகளிர் சேமிப்பு மாதமாக அமுல்படுத்த அறிவித்துள்ளது.

அதற்கமைவாக சாய்ந்தமருது சமுர்த்தி வங்கியில் சேமிக்கும் ஒவ்வொரு மகளிருக்கு வங்கியினால் பரிசுப் பொருட்களும் சாய்ந்தமருது அக்ஸா பெஷன் நிறுவனத்தினால் ரமழான் பண்டிகைக்கான 30 வீத விலைக் கழிவு பரிசுக் கூப்பன்களும் வழங்கப்படுகின்றன.

இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே இரவில்...

மேற்கொண்டனர்.

வீட்டில் இருந்த பொருட்களுக்கு சேதம் விளைவித்த குழுவினர், இளைஞர் ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

அதனையடுத்து, கொடிகாமம் பொலிஸ் பிரிவிலுள்ள, மீசாலை, வடக்குக் கிழக்கு ஊரொல்லையிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த குழுவினர், அங்கிருந்த இரண்டு கார்கள், பட்டா ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அடித்து நெருக்கியுள்ளனர்.

இதன் போது, கிராமத்து இளைஞர்களால், தாக்குதல் நடத்தியவர்களில் 4 பேர் பிடிக்கப்பட்டதுடன், அவர்கள், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஏனையவர்கள் தப்பியோடிய நிலையில், அவர்கள் விட்டுச் சென்ற இரண்டு மோட்டார் சைக்கிள், இரண்டு வாள்கள் மற்றும் கொட்டன்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவ இடங்களுக்கு விரைந்த தடவியல் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (அ)

## மருமகன்...

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## லாப்ஸ் எரிவாயு...

கொள்கலனின் விலை 300 ரூபாயினாலும், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 120 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனின் புதிய விலை 4,630 ரூபாயாகவும், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனின் புதிய விலை 1, 862 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ)

## உணவு விலை...

சிற்றுண்டி வகைகள் 10 ரூபாவினால் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை உணவகம் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## உணவுப் பொருள்களின்...

எரிசக்தி, உரம், போக்குவரத்துச் செலவுகள் ஆகியவற்றுக்கான செலவுகள் அதிகரிப்பதனால் உணவுப் பொருள்கள் விலை அதிகரிக்கும்.

இது மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவுகளில் மிகப்பெரிய அழுத்தத்தைக் கொடுக்கும்.

உலகளாவிய ரீதியிலான மசகு எண்ணெயில் 38 வீதமும் எல்.பி.ஜி. எரிவாயுவில் 29 வீதமும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவில் 19 வீதமும் ஹோர்மூஸ் நீரிணையின் ஊடாகவே கொண்டு செல்லப்படுகிறது.

இந்த நீரிணையினூடாக அனுப்பப்படும் தயாரிப்புக்களில் 84 வீதமானவை ஆசிய நாடுகளையே சென்றடைகின்றன. எனவே, இதன் தாக்கம் ஆசிய நாடுகளில் அதிகம் உணரப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## மத்திய கிழக்கு...

மத்திய கிழக்கில் இடம்பெற்று வரும் சம்பவங்களை அவதானித்து வருவதாகவும் குண்டு வீச்சிலும் யுத்தத்திலும் உயிரிழந்தவர்களுக்காக துயரத்தை பகிர்ந்து கொள்வதாக வத்திக்கான் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறுவர்கள் உட்பட பல அப்பாவிகளும் கொல்லப்பட்டுள்ளனர் என்பதையும் அவர்களுக்கு உதவி செய்தவர்களில் முக்கியமாக மரோனைட் அருள்பணியாளார் பியர் எல்-ரஹி உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இக் கொலைச் சம்பவம் லெபனானிலுள்ள கியூலாயா பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்த போரானது விரைவில் முடிவுக்கு வரவேண் டும் என பிரார்த்திப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய தாக்குதலுக்குட்பட்ட வீட்டிலுள்ள உள்ளூர் குடும்பத்தை காப்பாற்றுவதற்காக அங்கு சென்ற எல்-ரஹி இஸ்ரேலிய பீரங்கியால் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கில் ஆசிரியர்...

விவகார அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் ஆளுநர் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றங்கள், தொடர் வேலைத்திட்டங்கள் மற்றும் நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. மேலும், திட்டங்களை முன்னெடுப்பதில் நிலவும் சவால்களை இனங்கண்டு, அவற்றை எவ்வாறு வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவது என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# மகளிர் தின நிகழ்வும் கண்டனப் பேரணியும்



முல்லைத்தீவு, மார்ச் 12

போதைப்பொருள் பாவனைக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டனப் பேரணியும் மகளீர் தின நிகழ்வும் கட்டட திறப்புவிழா மற்றும் கௌரவிப்பு நிகழ்வும் கேப்பாபுலவு பொது நோக்கு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கேப்பாபுலவு மாதர் அபிவிருத்திச் சங்க செயலாளர் திருமதி சி.பிரசன்னா தலைமையில் நடைபெற்ற கண்டனப் பேரணியில், வேண்டாம் வேண்டாம் வன்முறை வேண்டாம், நிறுத்து நிறுத்து மதுவை நிறுத்து எனும் கோசங்கள் எழுப்பப்பட்டன.

பேரணியை தொடர்ந்து மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரதவிருந்தினரினரால் தேசிய கொடி ஏற்றப்பட்டதை தொடர்ந்து கேப்பாபுலவு மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கு பெரண்டினா அபிவிருத்தி சேவைகள் நிறுவனத்தின் முழுமையான நிதி அனுசரணையில் நிர்மானிக்கப்பட்ட கட்டடம் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் தயந்த பெனான்டோவால் திறந்துவைக்கப்பட்டது.

தொடர்ந்து மகளிர் தினத்தை முன்னிட்ட முதியவர்கள், மாகாண மற்றும் தேசிய ரீதியில் வெற்றிபெற்ற பெண் மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகம் தெரிவாகிய பெண் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (அ)

---

இதன் பின்னர் விசேட கருத்துகளைத் தெரிவித்த ஆளுநர்,

"வழங்கப்பட்ட எந்தவொரு இடமாற்றமும் மேன்முறையீடு காரணமாக நிறுத்தப்பட்டால், அந்த வெற்றிடத்துக்குப் பதிலாக உடனடியாக மாற்று இடமாற்றமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். நடப்பாண்டுக்கான இடமாற்றங்களை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டும். இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களை விடுவிக்கத் தவறும் பாடசாலை அதிபர்களுக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்." - என்று தெரிவித்தார்.

பாடசாலைகளில் இடம்பெறும் சட்டவிரோதப் பண அறவீடுகள் தொடர்பில் கடும் அதிருப்தி வெளியிட்ட ஆளுநர்,

"இலவசக் கல்வி நடைமுறையில் உள்ளபோதிலும், பாடசாலைகளில் ஏதாவது ஒரு வழியில் மாணவர்களிடம் பணம் அறவிடும் செயற்பாடுகள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இது தொடர்பில் எனக்கு தினமும் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. சில பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், குறிப்பிட்ட சில பெற்றோர்கள் ஊடாகப் பணத்தை அறவிடும் செயற்பாட்டை முன்னெடுத்துவிட்டு, அதற்கும் தமக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என நழுவப் பார்க்கின்றனர். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலைகளுக்குத் திடீர் களப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். அங்கு, இருப்பில் பதிவு செய்யப்படாமல் அன்பளிப்புகள் பெறப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால், உரிய விசாரணைகளை மேற்கொண்டு அதிபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இவ்விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்தால் மாத்திரமே இச்சட்டவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்." - என்று வலியுறுத்தினார்.

இந்த விசேட கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

## அச்சமின்றி...

ரொலரன்ஸ்" நிலைப்பாடு எட்டப்பட்டுள்ளது. இது ஒரு மிகப்பெரிய சாதனை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னைய காலங்களில் நிலவிய முறைகேடுகள் களையப்பட்டுள்ளதால், முதலீட்டாளர்கள் இப்போது சுதந்திரமாகவும் நியாயமாகவும் தமது வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

ஊழலற்ற சூழல் காரணமாக சுங்கம், மதுவரி மற்றும் உள்நாட்டு வருமான வரித் திணைக்களங்களில் வருவாய் கணிசமாக அதிகரித்துள்ளது.

முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் எளிமையான மற்றும் வெளிப்படையான வரி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்களின் நலனை உறுதிப்படுத்த "புதிய முதலீட்டு பாதுகாப்புச் சட்டம்" அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கான சட்ட வரைபு ஏற்கனவே உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அனைத்துச் செயல்பாடுகளையும் ஒரே இடத்தில் விரைவாக முடிக்கும் வகையில் முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இன அல்லது மத ரீதியான வன்முறைகள் இல்லாத அமைதியான சூழல் தற்போது இலங்கையில் நிலவுகிறது. உலகின் கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளை இணைக்கும் பிரதான கடல் போக்குவரத்துப் பாதையில் இலங்கை அமைந்திருப்பது சர்வதேச வர்த்தகர்களுக்கு மிகப் பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்த மாற்றங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஒரு பொற்காலமாக அமையவுள்ளதோடு, இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் - என்றார். (அ)

## புலனாய்வு...

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கத்தின் இத்தகைய செயல்பாடுகள் நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பைச் சீர்குலைக்கிறது. பொலிசாரின் இடமாற்றங்கள் மற்றும் பதவியுயர்வுகள் அனைத்தும் தற்போதைய அரசாங்கத்தின் அரசியல் விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படுகின்றன. உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பான விசாரணைகளில், உண்மையான குற்றவாளிகளை மறைத்துவிட்டு, தமக்கு வேண்டியவர்களைப் பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் அதிகாரிகளைப் பயன்படுத்தி வருகிறது. உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலின்போது கடமையிலிருந்த முக்கிய அதிகாரிகளை அரசாங்கம் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி வருகிறது. இதனூடாக உண்மையான குற்றவாளிகளை மறைக்க முயற்சித்து வருகிறது. குறிப்பாக, தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் குடும்பத்தினரைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. பயங்கரவாதத்தை ஒழிப்பதில் முக்கிய பங்காற்றிய சுரேஷ் சலே போன்ற அர்ப்பணிப்புள்ள அதிகாரிகளுக்கு மதிப்பளிக்காமல், அரசாங்கம் அவர்களைக் குறிவைப்பது வருத்தமளிக்கிறது. இலங்கைக்கு புலனாய்வுத்துறை தகவல்களை வழங்கும் நட்பு நாடுகளுடன் அரசாங்கம் தேவையற்ற முரண்பாடுகளை உருவாக்கி வருகிறது. இது எதிர்காலத்தில் தகவல் பரிமாற்றத்தைத் தடுத்து நாட்டின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும். மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா பிராந்தியங்களில் நிலவும் தற்போதைய போர்ச் சூழல் ஆசிய பிராந்தியத்திற்கும், குறிப்பாக இந்தியப் பெருங்கடல் பகுதிக்கும் பரவியுள்ள நிலையில், நாட்டின் புலனாய்வுப் பிரிவை பலப்படுத்துவதற்குப் பதிலாக அதனை அரசாங்கம் பலவீனப்படுத்துவது ஆபத்தானது. நட்பு நாடுகளுடன் புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் உறவை அரசாங்கம் சிதைப்பதன் மூலம், எதிர்காலத்தில் இலங்கைக்குக் கிடைக்க வேண்டிய பாதுகாப்புத் தகவல்கள் தடைப்பட வாய்ப்புள்ளது -என்றார். (அ)

## மின்சார...

வாய்ப்பை ஏற்படுத்தி தருவதாக தொழில் ஆணையாளர் நாயகம் தொழிற்சங்கங்களிடம் உறுதியளித்துள்ளார்.

பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டதை தொடர்ந்து, பாதிக்கப்பட்டிருந்த மின்சார விநியோகப் பராமரிப்புப் பணிகளை மீள வழமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 09 ஆம் திகதி பிற்பகல் முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழிற்சங்க நடவடிக்கையினால், நாட்டின் பல பகுதிகளில் மின்தடை மற்றும் மின்சாரப் பராமரிப்புப் பணிகளில் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன.

ஜனாதிபதியுடனான இன்றைய கலந்துரையாடலின் பின்னரே, இந்த தொழிற்சங்கப் போராட்டத்தின் எதிர்கால செயற்பாடு மற்றும் மின்சார கட்டமைப்பில் உள்ள சிக்கல்களுக்கான தீர்வுகள் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என மின்சார தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வடக்கு சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு தனியாரின் பங்களிப்பு மிக அவசியம்

## மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மார்ச் 12

வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் தனியார் துறையின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும் எனவும், இத்துறையை மேம்படுத்துவதற்குத் தனியார் துறையினருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சுற்றுலாத்துறைப் பங்குதாரர்களுடன் நேற்று புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்ற விசேட சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

சுற்றுலாத்துறை அமைச்சின் ஊடாக எமக்குத் தற்போது ஒரு சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளது. எதிர்வரும் 23ஆம் திகதி இங்கு வருகைதரவுள்ள சுற்றுலாத்துறைப் பிரதி அமைச்சர், 2027 மற்றும் 2028ஆம் ஆண்டுகளுக்கான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயவுள்ளார். இது எமக்குக் கிடைத்துள்ள ஒரு சிறந்த வாய்ப்பாகும். இத்திட்டங்களை முன்னெடுப்பதில் அரச திணைக்களங்கள் ஆற்ற வேண்டிய வகிபாகத்தையும், தனியார் துறையினராகிய உங்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் முழுமையாக உணர்ந்துள்ளோம்.

போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரை, தற்போதைய நிலையில் பலாலி சர்வதேச விமான நிலையத்தின் ஊடான வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றன. அதன் ஓடுபாதையை விரிவுபடுத்த வேண்டிய கட்டாயத் தேவை உள்ளது. அதே போல, காங்கேசன்துறை துறைமுகமானது இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வெகுவிரைவில் புனரமைக்கப்படவுள்ளது. எமது சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்னைகளில் ஒன்றாக யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான நீண்ட பயண நேரம் காணப்படுகின்றது. தரைவழிப் போக்குவரத்துக்கு 8 தொடக்கம் 9 மணித்தியாலங்கள் வரை தேவைப்படுகின்றன. அண்மையில் இங்கு வருகை தந்த சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் அமைச்சர், இச்சவாலுக்குத் தீர்வாகக் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து உள்ளூர் சேவைகளை இயக்குவதற்கான பிரத்தியேக முனையமொன்றை எதிர்காலத்தில் அமைக்கவுள்ளது - என்றார். (அ)

# தீவிரமடையும் எலிக்காய்ச்சல்

கொழும்பு, மார்ச் 12

இலங்கையில் கடந்த ஒரு வருடத்தில் சுமார் 13,000 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300 ஐ நெருங்கியுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் விசேட நிபுணர் மருத்துவர் துஷானி தாபரேரா மற்றும் சுகாதார அதிகாரிகள் முக்கிய தகவல்களை வழங்கியுள்ளனர்.

அதன்படி, 2026ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் மாத்திரம் சுமார் 18,000 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கடந்த 2025ஆம் ஆண்டில் இந்த நோயினால் சுமார் 200 பேர் உயிரிழந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகில் அதிகப்படியான எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகும் நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருப்பதாக மருத்துவர் துஷானி தாபரேரா குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடுமையான காய்ச்சல், தலைவலி, மூட்டு வலி, தசை வலி மற்றும் கண்கள் சிவப்படைதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அதனை அலட்சியப்படுத்தாமல் உடனடியாக மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீர் கலந்த நீர் அல்லது மண், மனித உடலில் உள்ள காயங்கள், வெட்டுக்கள் அல்லது மெல்லிய சவ்வுகள் ஊடாக உடலுக்குள் செல்வதன் மூலம் இந்த பக்டீரியா தொற்று ஏற்படுகின்றது.

இரத்தினபுரி, காலி, கேகாலை, களுத்துறை, மொனராகலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

குறிப்பாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதிக ஆபத்துள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அறிகுறிகள் தென்பட்டவுடன் தாமதிக்காமல் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுமாறும் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (அ)

# பேக்கரிகள் நெருக்கடியில்!

கொழும்பு, மார்ச் 12

டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசிய எரிசக்தி மூலங்களைப் பெறுவதில் நாடு முழுவதும் உள்ள பேக்கரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், தற்போது பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்த்தும் எண்ணம் இல்லை என்றும் அச்சங்கம் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

ரத்தொலுஹமவிலுள்ள சங்கத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள பேக்கரிகளில் சுமார் 25 வீதமானவை எரிவாயுவையும் 25 வீதம் முதல் 30 வீதமானவை டீசல் மற்றும் மண்ணெண்ணெயையும் எஞ்சியவை விறகு மற்றும் ஏனைய மாற்று எரிபொருட்களைப் பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

பல பேக்கரிகள் வழமையாக டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெயைக் கொள்கலன்களில் கொண்டு செல்வது வழக்கம். எனினும், கொள்கலன்களில் எரிபொருளை வழங்குவதற்கு அரசாங்கம் விதித்துள்ள தடை காரணமாக பேக்கரி உரிமையாளர்கள் தமது அன்றாட பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

நாடு முழுவதும் நிலவும் மின்சாரத் தடைகளும் பேக்கரி உற்பத்திகளைப் பெரிதும் பாதித்துள்ளன. எரிவாயு விநியோகத்தில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் விலை உயர்வு காரணமாகத் தொழில் நடவடிக்கைகளைச் சீராகப் பேணுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# நீர்க் கட்டணம் உயராது

கொழும்பு, மார்ச் 12

நீர் கட்டணத்தை அதிகரிக்கும் எண்ணம் தற்போது இல்லை என்று நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த நீர் கட்டண திருத்தம் ஜூன் மாதத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# பொது போக்குவரத்தை பலப்படுத்த ஜப்பானிடமிருந்து புதிய பேருந்துகள்

கொழும்பு, மார்ச் 12

வசதியான, செயல்திறனான மற்றும் தொடர்ச்சியான பொது போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு, இந்த மாதம், ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து எட்டு புதிய பேருந்துகளைப் பெறவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்குள், மேலும் பல புதிய பேருந்துகள் கிடைக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொதுப் போக்குவரத்தை வலுவாக மேம்படுத்தினால், வாகன இறக்குமதிக்கான செலவைக் கணிசமாகக் குறைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெருமளவிலான வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக அதிகளவில் செலவழிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகர்ப்புறங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் ஒரு பிரதான பிரச்னையாக உள்ளதால், வீதியில் மனித நேரங்கள் வீணாகுவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லா வகை இரத்தத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் , இரத்த வங்கி ஆபத்தான நிலையில் உள்ளதாக இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

அது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லா வகை இரத்தத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எமது இரத்த வங்கியில் 330 பைந்த் குருதி இருக்க வேண்டும், ஆனால் தற்போது இருக்கும் குருதியின் அளவு 192 பைந்த் ஆகும்.

இது எமது இரத்த வங்கியைப் பொறுத்த வரையில் மிகவும் ஆபத்தான நிலையாகும். இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை விநியோகிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம்.

இரத்ததான முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு குருதி சேகரிக்கப்பட்டாலும் நாளாந்தம் விநியோகிக்கப்படும் குருதியின் அளவு அதிகரித்து செல்கின்றது, இரத்த வங்கியில் நேரடியாக வந்து இரத்தம் கொடுக்கும் குருதிக்கொடையாளர்களுக்கும் தொலைபேசி வாயிலாக அழைப்புக்களை விடுத்தும் வருகின்ற கொடையாளர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே காணப்படுகின்றது.

அத்துடன் ஏனைய இரத்த வங்கிகளிடமிருந்தும் தினமும் குருதியை பெற்றே நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்குகின்றோம்.

தற்போது அவர்களிடமும் குருதியின் இருப்பு குறைவடைந்துள்ளதினால் ஏனைய இரத்த வங்கிகளிடமிருந்தும் குருதியை பெற முடியாத இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எதிர்வரும் நாட்களில் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம். ஆகவே சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், பொது அமைப்புகள், திணைக்களங்கள், பாடசாலைகள், பல்கலைக் கழக மாணவர் அமைப்புகள், ஏனைய கல்வி நிறுவனங்கள் தங்கள் தங்கள் இடங்களில் இரத்த தான முகாம்களை ஒழுங்கு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் உங்கள் இடத்திற்கு வருகை தந்து குருதி சேகரிக்கும் பணியை நாம் செய்வதற்கு தயாராக இருக்கின்றோம்.

அத்துடன் தனி நபர்கள் எமது இரத்த வங்கிக்கு நேரடியாக காலை 8.00 மணியிலிருந்து பி.ப 7.00 மணிவரை சமூகம் கொடுத்து இரத்த தானம் செய்வதன் மூலம் குருதி தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்யலாம்.

ஆகவே இவ் இக்கட்டான நிலையை கருத்தில் கொண்டு இளைஞர், யுவதிகள் இரத்த தானம் செய்வதற்கு முன்வந்து எமது உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு 0212223063, 0772105375 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.